தமிழ் மொழி

இறுதியாண்டுத் தேர்வு வகுப்பு 08 2013

## பன்முகத்தேர்வு வினாக்கள் பகுதி 1 வருடம்: 08

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | பணிவு என்பது<br>1. மரியாதை 2. கனவு 3. உறவு 4. நாடகம் | 1 | 2 | 3 | 4 |
| 2 | நவைெநச என்பது<br>1.இலையுதிர் 2. மாரி 3. மழை 4. கோடை | 1 | 2 | 3 | 4 |
| 3 | பின்வருவனவற்றில் அ∴றிணை<br>1. செல்வன் 2. ராமன் 3. கல் 4. தமயந்தி | 1 | 2 | 3 | 4 |
| 4 | **தலைவன்** என்ற சொல்லின் எதிர்ப்பாற்சொல்<br>1. தலைவள் 2. தலைவி 3. தலையி 4. தலையிச்சி | 1 | 2 | 3 | 4 |
| 5 | வேறுபட்ட சொல் எது?<br>முத்தமிழ் 2. செந்தமிழ் 3. பைந்தமிழ் 4. ஆங்கிலம் | 1 | 2 | 3 | 4 |
| 6 | புன்னகை என்பது?<br>1. விருப்பு 2. பிரிவு 3. ஆசை 4. மென்சிரிப்பு | 1 | 2 | 3 | 4 |
| 7 | ஓவியம் என்பது<br>1. பாட்டு 2. பாடம் 3. சித்திரம் 4. புத்தகம் | 1 | 2 | 3 | 4 |
| 8 | அவன் ஒரு பாட்டுப் பாடுகிறான். இதில் பெயர்ச்சொல்<br>1.பாடுகிறான். 2. பாட்டு. 3.ஒரு 4. அவன் | 1 | 2 | 3 | 4 |
| 9. | கிறிஸ்மஸ் என்பது.<br>1. தீபாவளி 2. தைப்பொங்கல்<br>3. நவராத்திரி 4. நத்தார் | 1 | 2 | 3 | 4 |
| 10. | சுறுசுறுப்பு என்பதன் ஒத்தசொல்<br>1. சோம்பல் 2. முயற்சி 3. கவலையீனம் 4. வெறுப்பு | 1 | 2 | 3 | 4 |
| 11. | சித்திரமும் ------ ப் பழக்கம் என்பது பழமொழி<br>1. கால் 2. கை 3. தலை 4. வால் | 1 | 2 | 3 | 4 |
| 12. | கோழி கூவும். மயில் -------.<br>1. கூவும் 2. கத்தும் 3. பேசும் 4. அகவும் | 1 | 2 | 3 | 4 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13. | வனம் என்பது.<br>1. வசநந 2. ாழரளந 3. ளநளநசவ 4. கழசநளவ | 1 | 2 | 3 | 4 |
| 14. | யானைக்கு தந்தங்கள் எத்தனை<br>1. ஒன்று 2. இரண்டு 3. நாலு 4. மூன்று | 1 | 2 | 3 | 4 |
| 15 | செல்வம் என்பது.<br>1. வெள்ளை 2. பணம் 3. உலோகம் 4. உடை | 1 | 2 | 3 | 4 |
| 16 | கோழியின் இளமைப்பெயர்<br>1. குட்டி 2. கன்று 3. பிள்ளை 4. குஞ்சு | 1 | 2 | 3 | 4 |
| 17. | மெய் என்பது<br>1. உண்மை 2. பொய் 3. காய் 4. தனிமை | 1 | 2 | 3 | 4 |
| 18. | கல்யாணவீட்டில் கொட்டப்படும் இசை<br>1.மேளம் 2. போர்முரசு 3. தவில் 4. மத்தளம் | 1 | 2 | 3 | 4 |
| 19. | மாணவனின் எதிர்ப்பால் சொல்<br>1. தலைவி 2. சிறுமி 3. மாணவி 4. பாடகி | 1 | 2 | 3 | 4 |
| 20. | ஆட்டின் இளமைப் பெயர்<br>1. குட்டி 2. கன்று 3. பிள்ளை 4. குஞ்சு | 1 | 2 | 3 | 4 |
| 21 | யேசுநாதர் பிறந்த வரும் மாதம் எது?<br>1. தை 2. சித்திரை 3. ஆவணி 4. மார்கழி | 1 | 2 | 3 | 4 |
| 22 | சிறுமியின் கால் சலங்கை கலீர்கலீர் என ஒலித்தது .கலீர் கலீர் என்பது<br>1. மரபுச்சொல் 2. அடுக்குமொழி<br>3. வினைசொல் 4. தொடர்மொழி | 1 | 2 | 3 | 4 |
| 23 | மாரிகாலத்து மேகத்தை இப்படி அழைப்பர்<br>1. முகில் 2. மேகம். 3. கார்முகில் 4. மழை. | 1 | 2 | 3 | 4 |
| 24 | அறுபடை பிரித்து எழுதினால்<br>1. அ + படை 2. அறு+படை 3. ஆறு+படை 4. அறுப+டை | 1 | 2 | 3 | 4 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 25 | நாய் குரைக்கும். சிங்கம்<br>1.கர்ச்சிக்கும் 2. முழங்கும் 3.ஊளையிடும் 4.சீறும் | 1 | 2 | 3 | 4 |
| 26 | பேச்சாலும் நடிப்பாலும் கருத்துக்களை விளக்குவது<br>1. இசை 2. பாடல் 3. நாடகம் 4. சங்கம் | 1 | 2 | 3 | 4 |
| 27 | போரில் போரிடுவது<br>1. வீரம் 2. மானம் 3. இன்பம் 4. விருந்தோம்பல் | 1 | 2 | 3 | 4 |
| 28 | நீதியின் எதிர்சொல் --------------<br>1. உண்மை 2. செயற்கை 3. மகிழ்ச்சி 4.அநீதி | 1 | 2 | 3 | 4 |
| 29 | சிறிய - ஆறு சேர்த்தெழுதுக<br>1. சிறுஆறு 2. சிற்றாறு 3. சிறியஆறு 4. சிற்ஆறு | 1 | 2 | 3 | 4 |
| 30 | சிலைகள் செய்பவர் --------<br>1. தொழிலாளி, 2. நண்பன் 3. ஓவியன், 4. சிற்பி | 1 | 2 | 3 | 4 |

**(30 புள்ளிகள்)**

**வினாக்கள்** பகுதி 2 **வருடம்: 08**

1. உலகின் சான்றோர்களால் ஒருமொழி போற்றப்படுகிறதென்றால் அம்மொழியில் அமைந்துள்ள இலக்கிய இலக்கண செழுமையே அதற்குக் காரணம். தமிழன்னையின் அணிகலன்களாக விளங்கிக் கொண்டிருப்பவை இலக்கிய நூல்களாகும். சங்கத்தமிழ் சான்ற அறநெறி நூல்கள் தேவார பிரபந்தங்கள் மற்றும் சிலப்பதிகாரம் மணிமேகலை வளையாபதி குண்டலகேசி போன்ற காப்பியங்களும் தமிழ் மொழிக்கு சிறப்புச் சேர்த்துக் கொண்டிருக்கின்றன. சிலப்பதிகாரமே சிறந்த காப்பியமாக போற்றப்படுகின்றது. சிலப்பதிகாரக் காப்பியமானது முத்தமிழ்க் காப்பியம், நாட்டுக் காப்பியம், நாடகக் காப்பியம், குடிமக்கள் காப்பியம், இறைநெறிப் பொதுமைக் காப்பியம் எனப் பல வகையான கூறுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இக்காப்பியத்தில் இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழும் இடம்பெற்றிருப்பதால் சிலப்பதிகாரம் முத்தமிழ்க் காப்பியம் என்ற சீரும் சிறப்பும் பெற்று விளங்குகிறது.

தமிழன்னையின் அணிகலன்களாக விளங்குவது யாது?

______________________________________________________________________

காப்பியங்களின் பெயர்களை எழுதுக.?

______________________________________________

இலக்கிய நூல்களின் பெயர்கள் தருக

______________________________________________

முத்தமிழ்க் காப்பியம் என்பது எனது?

______________________________________________

ஒரு மொழி போற்றப்படுவதற்கு காரணமாயுள்ளது எது?

______________________________________________

(10 புள்ளிகள்)

**2. கீழே உள்ள சொற்களுக்கு ஒத்தகருத்து சொற்களை எழுதுக**

தாழ்வு - ____________

துக்கம் - ____________ செல்வம் - ____________

உறவினர் - ____________ நூல் - ____________

(5 புள்ளிகள்)

**3. கீழே உள்ள சொற்களுக்கு ஒத்தகருத்து, எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுக**

நூல் - ____________

சோம்பல் - ____________

பணிவு - ____________

ஆக்கம் - ____________

ஓவியம் - ____________

(5 புள்ளிகள்)

**4. சேர்த்தெழுதுக. பிரித்தெழுதுக.**

பொன் - காலம் ________________ மட்பானை ________________

கல் - கண்டு ________________ சொற்போர் ________________

நல்ல - குணம் ________________ பற்பொடி ________________

தெற்கு - திசை ________________ பழஞ்சோறு ________________

கல் - பாறை ____________________ வெண்மணல் ____________________

5. **பின்வரும் வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் எழுதுக.**

நண்பர்கள் இருவரும் உரையாடினர்.

எழுவாய் __________________________ பயனிலை ___________________________

வேடனின் அம்பு மானைக் கொன்றது.

எழுவாய் _______________ பயனிலை __________________ செயப்படுபொருள் _______________

மாணவர்களிடம் நற்பண்புகள் வளர வேண்டும்

எழுவாய் ______________________ செயப்படுபொருள் ____________________________

மணி இப்பொழுது பிடில் வாசிக்கிறான்.

எழுவாய் _________________ பயனிலை: __________________________________

தனம் தன்னுடைய வாகனத்தில் ஏறினான்

எழுவாய் _______________ பயனிலை ___________________ செயற்படுபொருள் _____________

**(10 புள்ளிகள்)**

3. **பின்வரும் சொற்களை வைத்து வசனம் அமைக்க**

பட்டமளிப்பு விழா

_______________________________________________________________________________

உற்றார்உறவினர்

_______________________________________________________________________________

கோடைகால விடுமுறை

_______________________________________________________________________________

20ம் நூற்றாண்டு

_______________________________________________________________________________

ஆசிரியரின் அறிவுரை

____________________________________________________________

(10 புள்ளிகள்)

4. உமக்குத் தெரிந்த பழமொழிகள் 5 எழுதுக

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

(10 புள்ளிகள்)

5. கீழே உள்ள உரைப்பகுதியை வாசித்து அதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க.

டச்சுக்காரர்கள் காலத்திலும் பின்னர் ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்தும் மன்னார், திரிகோணமலை வன்னிக்காடுகள் என வன்னி மக்கள் இடைவிடாமல் போர் நடத்தி வந்தனர். அவர்களின் வழியில் வந்த மறக்க முடியாத மாவீரன்தான் பண்டாரக வன்னியன்.

முல்லைத்தீவில் இருந்து வற்றாப்பளை அம்மன் கோவில் வரை உள்ள 2000 சதுர மைல் நிலத்தை ஆட்சி செய்து வந்தான் பண்டார வன்னியன் .

பண்டாரவன்னியன் மீது வெளையர்கள் பல முறை படை எடுத்து தோல்வி அடைவதைப பார்த்த காக்கை வன்னியன், வெள்ளையர்களுடன் சேர்ந்து சதி செய்து பண்டார வன்னியனை கொல்ல திட்டமிட்டான்.

.

நல்லவன் போல நடித்து பண்டார வன்னியனிடம் மன்னிப்பு கேட்டு சேர்ந்து கொண்டு

சமயம் பார்த்து ஆங்கிலப் படைகளிடம் பண்டார வன்னியனை சிக்க வைத்தான்

1803 ஆம் வருடம் அக்டோபர் மாதம் 31 ஆம் நாள் கற்சிலைமடு என்ற இடத்தில் அங்கிலேய தளபதி ரிபேக் என்பவனால் பண்டார வன்னியன் கொல்லப்பட்டான் .

எனினும் அவனது வீரத்தை வியந்து அவனைக் கொன்ற அந்த ஆங்கிலேயத் தளபதி பாருங்களேன்!"

(10 புள்ளிகள்)

**6. மாறி இருக்கும் சொற்களை மாற்றி, சரியான வசனமாக எழுதுக.**

நண்பர்கள் - பாராட்டினர் - அவனைப் - தம்பியின்

நான் - அழைத்துச் - சென்றேன் - தங்கையை - எனது

விலங்கு - காணப்படும் - மட்டும் - அவுஸ்திரேலியாவில் - கங்காரு

போனார்கள் - அவர்கள் - போன - சிட்னிக்குப் - மாதம்

_______________________________________________________________

பார்த்துக் - தொலைக்காட்சி - இருந்தான் - அவன் - கொண்டு

_______________________________________________________________

**(10 புள்ளிகள்)**

**7. நீர் படித்து ரசித்த ஒரு புத்தகத்தைப் பற்றி ஒரு விமர்சனம் எழுதுக.**

_______________________________________________________________

_______________________________________________________________

_______________________________________________________________

_______________________________________________________________

_______________________________________________________________

_______________________________________________________________

_______________________________________________________________

_______________________________________________________________

_______________________________________________________________

_______________________________________________________________

_______________________________________________________________

_______________________________________________________________

_______________________________________________________________

_______________________________________________________________

_______________________________________________________________

_______________________________________________________________

**(10 புள்ளிகள்)**